Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

11.06.2020 வியாழக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

**புதினம்? தெரியுமோ**

இனுவிலில் தங்கியிருந்துவிட்டு இந்தியா சென்ற பின் கொரோனா வால் பீடிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்ட வியாபாரி, உட்பட 173 இந்தியர்கள் இலங்கையில் இருந்து தாயகம் சென்றிருந்த பக்.2

## தனிமைப்படுத்திய கடற்படையினர் 201 பேர் விடுவிப்பு

வவுனியா, ஜூன் 11

வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 201 கடற்படையினர் இன்று வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

பம்பைமடு மற்றும் பெரியகாடு இராணுவ முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 201 கடற்படையினரே இவ்வாறு விடுவிக் பக்.2

## தபால்மூல வாக்களிப்பு ஜூலை 2 ஆம் வாரம்

கொழும்பு, ஜூன் 11

2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் 13,14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே தபால் மூல வாக்களிப்பு நடைபெறும். இந்த முறை தபால்மூல வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 10 ஆயிரத்தால் பக்.2

## யாழ்ப்பாண வாக்குச்சீட்டு நீளம்!

கொழும்பு, ஜூன் 11

பொதுத் தேர்தலில் நீளமான வாக்குச்சீட்டு 23 அங்குலம் கொண்டதாகவும் அகலமான வாக்குச் பக்.2

# ஆர்ப்பாட்டம் செய்தால் இனி தனிமைப்படுத்தல்

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 11

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பக்.2





## 30 பொலிஸார் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, ஜூன் 11

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தி பக்.2

## பொலிஸார் தாக்குதல்: கோத்தாபய சீற்றம்

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து பக்.6

## கொரோனா சிகிச்சைக்காக அக்கராயன் மருத்துவமனை

### 15 அமைப்புக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 11

அக்கராயனை விடுத்து பொருத்தமான மருத்துவமனையைத் தெரிவுசெய்யுமாறு 15 பொது அமைப்புக்கள் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கரா பக்.2



## தூக்கிக் கயிற்றில் உயிர்மாய்த்த பெண்

### சாவகச்சேரியில் சோகம்

சாவகச்சேரி, ஜூன் 11

தவறான முடிவெடுத்த 28 வயது குடும்பப்பெண் வீட்டு அறையினுள் தூக்கிக் கயிற்றில் தொங்கி சாவடைந்துள்ளார். இந்தச், சம்பவம் நேற்று இரவு 10 மணியளவில், சாவகச்சேரி வடக்கு முருகமூர்த்தி கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது. இவரது சடலம் பக்.2



## முன்னாள் போராளிகளை இணைக்க எதிர்ப்புத் தெரிவித்தவர் சுமந்திரனே

### தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் தவராசா தகவல்

கொழும்பு, ஜூன் 11

தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையில் போராளிகளை இணைத்துக்கொள்வதற்கு எம்.ஏ.சுமந்திரன் எதிர்ப்புத் தெரிவித்தார் என்று அந்தக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் போராளிகள் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் பக்.2

## கொரோனாவால் 1,150 பேர் மீளுகை!

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 28 பேர் குணமடைந்துள்ளனர். சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவால் இன்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 122 இலிருந்து பக்.2

## கிழிக்கப்பட்ட ஆடைகளுடன் பெண்ணின் சடலம்

### கொலை எனச் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 11

ஆடைகள் கிழிக்கப்பட்ட நிலையில், பெண் ஒருவர் அவரது வீட்டில் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் கொலைசெய்யப்பட் பக்.2



## புதினம் ? தெரியுமோ

னர். இந்த 173 பேரும் கொரோனா பரவ முன்னர் இலங்கைக்கு வந்து,பின்னர் 'லொக் டவுன்' காரணமாக இந்தியாவுக்குச் செல்லமுடியாமல் தத்தளித்தவர்கள். பின்னர் ஒருவழியாக ஜுன் 2 ஆம் திகதி சொந்த நாட்டுக்குச் சென்றிருந்தனர். ஆனாலும் இந்த 173 பேரில் அநேகர் சுற்றுலா விசாவில் வந்தவர்கள், இனுவில் தங்கி யிருந்தவரும் கூட சுற்றுலா விசாவில் வந்தவர்களில் ஒருவர் தான். ஆனால் அவர்கள் இங்கே பயணிகளாக நடந்து கொள்வதில்லை. வியாபாரிகளாகவே நடந்து கொள்கின்றனர். அதுவும் முன்பின் தெரியாதவர்களுக்கே வீட்டுக்கு உடுபுடைவைகளைக் கொண்டுசென்று கடன் அடிப்படையில் மலிவு விலையில் கொடுக்கும் வியாபாரிகள். இப்படி வீடு வீடாகச் சென்று கட னாகக் கொடுக்கும் கட்டாயம் ஏதும் இவர்களுக் கில்லை. ஆனால் ஏன் கொடுக்கிறார்கள்? அப்போதுதான் இலகுவாக அவர்களைப் பழக்கம் பிடிக்க முடியும். வெறும் 3 மாத சுற்றுலா விசா வில் வந்து நின்று புடைவை வியாபாரம் செய்யும் நபருக்கு ஏன் இங்குள்ளவர்களைப் பழக்கம் பிடிக்க வேண்டும். காரணம், மிகச் சுலபம். உண்மையில் அவர்கள் வியாபாரிகளல்லர். வெளிப்பூச்சுக்குத்தான் அவர்கள் புடைவை விற்கிறார்களே தவிர அவர்களின் பணி வேறு. இந்தியாவின் புலனாய்வு நடவடிக்கைக்காக இப்படி புடைவை வியாபாரிகளாகக் களமிறக் கப்பட்டவர்கள் தத்தமக்கென சில பகுதிகளை வரையறைசெய்து அந்தப்பகுதிக்குட்பட்ட தகவல் களைச் சேகரித்தல், மக்களின் கருத்தை அறிதல் , இந்திய நலன்சார் கருத்துருவாக் கங்களைச் செய்தல் என்று நிறையப் பணிகளை மறைக்கவே இந்தப் புடைவை வியாபாரி என்னும் வேடம். இனுவிலில் இருந்த இந்திய வியாபாரி யும் இப்படிப்பட்டவரே என்பதை அவர் வசித்த அய லைச் சேர்ந்தவர்கள் உறுதியாகச் சொல்கிறார் கள். அதெல்லாம் சரி, இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் சென்ற ஒருவர் இப்படி வியாபாரத்தில் ஈடுபட முடியுமா? ஆனால் இலங்கையில் முடியும். ஏனெனில் எல்லாம் மேலிடத்துச் சமாச்சாரங்கள்.

## 30...

யோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. முன்னிலை சோசலிசக் கட்சியினால் குறித்த ஆர்ப் பாட்டம் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. குறித்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தும் கடமையில் ஈடுபட்ட கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட, பொலிஸ் உத்தியோகத்தர் கள் 30 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். குறித்த பொலிஸ் உத்தி யோகத்தர்கள் அனைவரும், பொலிஸாரினால் நடத்திச் செல்லப்படும் அத்திடிய தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-22)

## தபால்மூல வாக்களிப்பு...

அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. கொரோனா வைரஸ் பரவா மல் பாதுகாப்பான முறை யில் தேர்தலை நடத்துவதற் காக சுகாதார உத்தியோகத் தர்களையும் இணைத்துக் கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நட வடிக்கை எடுத்துள்ளது. இதனால் அவர்களுக்கும் தபால்மூலம் வாக் களிப்பதற்கான வசதி கள் செய்து கொடுக்கப்பட் டுள்ளன. (சு-44)



## ஆர்ப்பாட்டம் செய்தால்...

அதற்கமைய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அமைச்சர வைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (எ-22)

## தனிமைப்படுத்திய கடற்படையினர்...

கப்பட்டனர். வெலிசறை கடற்படை முகாமில் பணி யாற்றிய கடற்படை உத்தியோகத்தர்கள் பலருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து முகாமில் கடமையாற் றிய கடற்படையினர் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவ டிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். வவுனியா பம்பைமடு இராணுவ முகா மில் அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 131 பேரும், பெரியகாடு இராணுவ முகாமில் இருந்த 70 பேருமாக 201 கடற்படையினர் 20 நாள்கள் தனிமைப்ப டுத்தலை நிறைவு செய்த பின்னர் நேற்று வெளியேறினர். குறித்த இராணுவ முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த கடற்படையினர் நால்வருக்கு கொரோனா தொற்று இருப்பது கடந்த 6 ஆம் திகதி உறுதிசெய்யப்பட்டதையடுத்து அவர்கள் நால்வரும் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (சு-110)

## கொரோனாவால்....

ஆயிரத்து 150 ஆக அதிகரித் துள்ளது. இதுவரை அடையாளம் காணப் பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்க மான 911 பேர் அடங்குகின்றனர். இதில் 874 பேர் கடற்படையினரா வர். அவர்களில் 622 பேர் இது வரை குணமடைந்துள்ளனர். இதேவேளை, வெளிநாடுகளிலி ருந்து நாடு திரும்பியவர்களில் இதுவரை 642 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள னர். இலங்கையில் கொரோனா வால் இதுவரை பாதிக்கப்பட் டுள்ள 1,869 பேரில் தற்போது 708 நோயாளிகள் மருத்துவமனைக ளில் சிகிச்சைபெற்று வருகின்ற னர். அத்துடன் 11 பேர் மருத்துவ மனைகளில் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, மருத்துவமனைக ளில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 51 பேர் கண்காணிப் பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ22)

## கிழிக்கப்பட்ட ஆடைகளுடன்...

டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை குசைன் வைத்தியர் வீதி யைச் சேர்ந்த வெள்ளக் குட்டி ரகுமத்தும்மா ( வயது -60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பெண்ணின் வீட்டுக்கு இன்று காலை சென்ற உறவினர் ஒருவர் குறித்த பெண் ஆடைகள் கிழிக் கப்பட்ட நிலையில் இறந்து கிடந்ததைக் கண்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த பெண்ணின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் தொடர்பிலான மேல திக விசாரணைகளையும் பொலி ஸார் மேற்கொண்டனர். (ப)

## கொரோனா சிகிச்சைக்காக.....

யன்குளம் பிரதேச மருத்துவ மனையை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் தன்னிச்சையான முடிவை மாற்றி, பொருத்த மான மருத்துவமனையைத் தெரிவுசெய்யுமாறு அமைப் புக்கள் கோரிக்கை விடுத் துள்ளன. பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களின் கோரிக்கை மனுவை மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளித்தனர். மனுவைக் கையளித்த பின்னர் அவர்கள் ஊடகங்க ளுக்குத் தெரிவித்ததாவது, 'கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா மருத்துவ மனை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. ஆனால் அதற் காக பொருத்தமான மருத்து வமனை ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். அதனை விடுத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்களின் அடிப்படை மருத் துவத் தேவையைப்பூர்த்தி செய்கின்ற, 15 க்கும் மேற்பட்ட கிராமங்களை கொண்ட ஒரு பிரதேசத்தின் மருத்துவமனையைத் தெரிவுசெய்வது பொருத்த மற்றது. இதனால் பொது மக்கள் அவசர மற்றும் அடிப்படை மருத்துவ வசதி கள் இன்றி நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்." என்றனர். (சு6,214)

## முன்னாள் போராளிகளை...

என கொழும்புக் கிளையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டு நான் வாதாடி விடுதலை செய்யப்பட்ட பல அரசியல் கைதிகள் அதன்பின் னர் கொழும்புக் கிளையில் இணைந்து செயற்படு கின்றனர். அவர்களுள் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் கைதாகி விடுதலையாகிய அரசியல் கைதியும் உள்ளார். கொழும்புக் கிளையில் முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்ள வேண்டுமென முன்னாள் கொழும்புக்கிளை செயளாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் கட்சிக் கூட்டத்தில் ஒரு முன்மொ ழிவை முன்வைத்தார் எனவும் அந்த கட்சிக் கூட்டத்தில் தான் மட்டுமே போராளிகளை இணைத்துக்கொள்ள ஆதரவு கொடுத்தார் எனவும் ஊடகங்களில் சுமந்திரன் தகவல் வெளியிட் டுள்ளார். கொழும்புக் கிளையில் முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்ள வேண்டுமென முன்மொழி வுக்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த சுமந்திரன் தற்போது உண்மைக்குப் புறம்பாக முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்வதில் கொழும் புக் கிளையின் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் தான் மட்டும்தான் முன்னாள் போராளிகளை இணைத்துக் கொள்ள ஆதரவு தெரிவித்தேன் என்றும் கூறியுள்ளார். இது கொழும்புக் கிளை நிர்வாகிகளையும், உறுப்பினர்க ளையும் அவமதிக்கும் மனிதாபிமானமற்ற உண் மைக்கு புறம்பான தகவல். கொழும்புக் கிளையின் அங்கத்தவரல்லாத ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளமையை கடுமையாக கண்டிக்கின்றோம் - என்றார். (எ)

## யாழ்ப்பாண....

சீட்டு 9 அங் குலம் கொண்டதாகவும் அச்சிடப்பட்டுள்ளது. கட்சிகளின் சின்னங்கள் செங்குத்து முறையில் , அதிகளவான விருப்பு இலக்கங்கள் பக்கவாட்டாகவும் அச்சிடப்பட்டுள்ளன. இதனால் அதிக கட்சிகள் போட்டியிடும் இடங்களில் வாக்குச்சீட்டுக்கள் நீளமாகவும், அதிக எம்.பிக்களைத் தெரிவு செய்ய வேண்டிய இடங்க ளில் வாக்குச் சீட்டுக்கள் அகலமாகவும் அமைந்துள்ளன. இம்முறை அதி நீளமான 23 அங்குல வாக்குச் சீட்டுக்கள் கம்பஹா, யாழ்ப்பாணம், கொழும்பு, வன்னி, திகாமடுல்ல, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு அச்சிடப்பட் டுள்ளன என்று அரச அச்சக திணைக்களம் தெரிவித்துள் ளது. கம்பஹா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு நீளமான வாக்குச்சீட்டு அச்சிடப்பட்டுள்ளதுடன், கொழும்பு, வன்னி, திகாமடுல்ல மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்க ளுக்கு அகலமான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ளது. (எ)

## தங்கூசி....

சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக விசாரணை களை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல்செய்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.தவமலர் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இரவு உணவருந்தி விட்டுப் வீட்டின் விறாந்தையில் படுத்திருந்த பெண் ணின் தாயார் இரவு 10 மணியள வில் கண் விழித்துப் பார்த்தபோது , வீட்டு அறையில் தொங்கிய நிலை யில் மகள் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப- 9)

# பெண் சடலமாக மீட்பு; படைச்சிப்பாய் கைது

கொழும்பு, ஜூன் 11

காணாமற்போன பெண் 8 நாள்களின்பின்னர் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் படைச்சிப்பாய் கைது செய்யப்பட்டார். கடந்த மே மாதம் 30 ஆம் திகதி மீகஹாதென்னை, போத்தலாவ கங்கையில் 49 வயதான ஆறு பிள்ளைகளின் தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சாவு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த களுத்துறை தீர்க்கப்படாத குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவு பொலிஸார், குறித்த பெண்ணின் கள்ளக்காதலன் என நம்பப்படும் முன்னாள் படைச் சிப்பாய் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இராணுவ சேவையிலிருந்து தப்பிச் சென்ற 36 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

மின்சார வயர் ஒன்றை பயன்படுத்தியே குறித்த பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

# விசாரணைக்கு தடை: நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்பு, ஜூன் 11

விசாரணைக்கு தடை ஏற்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் மற்றுமொரு அதிகாரிக்கு பல்வேறு இன்னல்களை ஏற்படுத்தியமை உட்பட அண்மைக் காலமாக அறிக்கையிடப்பட்ட சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் முதித்த விதானபத்திரண தெரிவித்தார்.

சிறுவர்கள் உடல், உள பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுதல் மற்றும் கவனத்தில் கொள்ளப்படாமை குறித்து அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது, அதற்குத் தடையை ஏற்படுத்தல் மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒவ்வொருவரும் குற்றமிழைப்பதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். குறித்த குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு, ஆயிரம் ரூபா அபராதமோ அல்லது 6 மாதங்கள் சிறைத் தண்டனையோ விதிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு

## கவனம் செலுத்துமாறு கோத்தா பணிப்பு

கொழும்பு, ஜூன் 11



மத்திய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டு நிர்மாணப் பணியில் கவனம் செலுத்துமாறு அரச அபிவிருத்தி, நிர்மாணத்துறை கூட்டுத்தாபனத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அரச அபிவிருத்தி, நிர்மாணத்துறை கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டது என்று ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

பாரம்பரிய முறைமைகளில் இருந்து விலகி அரச நிறுவனங்களை இலாப மீட்டும் நிலைக்கு மாற்றுவதற்குத் தேவையான திட்டங்களை விரைவாகத் தயாரிக்க வேண்டும்.

கடந்த 05 வருட இறுதியில் நிறுவனத்தைப் பொறுப்பேற்றபோது இருந்த நிலை மற்றும் தற்போதைய நிலை பற்றி அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவேண்டும், அடுத்த வருடத்தில் அடையவேண்டிய இலக்குகளை இவ்வருடத்திலேயே திட்டமிட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அரச நிறுவனங்கள் தனியார் துறையின் புதிய நிர்மாணத்துறை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தன் அவசியம் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி, தனியார் துறையுடன் போட்டியிடக்கூடிய வகையில் தரத்தையும் நியமங்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். அரச நிறுவனங்களிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்க வேண்டிய பணம் உரிய முறையில் கிடைக்காத காரணத்தால் எழுந்துள்ள பிரச்சினைகளும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

அது பற்றி கண்டறிந்து பணத்தை அறவிடுவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார் - என்றுள்ளது. (ப)

# யாழைச் சேர்ந்தவர் கனடாவில் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கனடாவில் கொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டுப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மார்க்கம் நகரில் 45 வயதான மதன் மகாலிங்கம் என்ற நபர் கடந்த சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார். இவரின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அறிவித்த ஜோர்க் பிராந்திய பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என ஜோரக் பொலிஸார் இன்று அறிவித்துள்ளனர். கடந்த 6ஆம் திகதி ஸ்டேலஸ் வீதி, கிழக்கு மார்க்கம் வீதிச் சந்திப்புக்கு அருகாமையில் மார்ஜேடல் வீதியில் உள்ள இல்லம் ஒன்றுக்கு வெளியில் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மதன் மகாலிங்கம் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என தெரிவிக்கப்படுகிறது. (ப)

# 6 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு

கொழும்பு,ஜூன் 11

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் 3 நாள்களுக்குத் தொடர்ச்சியாக விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்துக்கு முப்படை மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். முதல் நாள் வேலைத்திட்டம் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. (க)

# இம்முறை 2,000 ஹெக்டேரில் சின்ன வெங்காயச் செய்கை

## யாழ். விவசாயிகள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.குடாநாட்டில் இம்முறை சிறுபோகத்தின் போது இரண்டாயிரம் வரையிலான ஹெக்டேர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட விவசாயிகள் தீர்மானித்துள்ளனர்.



இந்த வெங்காயச் செய்கைக்கான நடுகை செய்யும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. வலி.கிழக்கு வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தீவுப்பகுதி அடங்கலாக பரவலாக செய்கையாளர்கள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். விதை வெங்காயத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டதோடு அதன் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரு அந்தர் விதை வெங்காயம் (ஐம்பது கிலோ) பதின்மூன்று ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

இதனை அடுத்து சில இடங்களில் செய்கையாளர்கள் உண்மை விதைகளைப் பயன்படுத்தி அவற்றை நாற்று மேடை அமைத்து அதில் இருந்து பெறப்படும் வெங்காய நாற்றுக்களைப் பயன்படுத்தியும் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுபோகத்துக்கான இந்த வெங்காயச் செய்கைக்கு கூடுதலாக விவசாயிகள் இம்முறை அதிக ஆர்வம் காட்டி நடுகையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-17)

# போதைப்பொருளை விழுங்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஜூன் 11

13 போதைப்பொருள் உருண்டைகளை விழுங்கிய ஒருவர் களுபோவில மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

பிலியந்தலை மாகந்தன பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி பண்டாரகம பிலியந்தலை வீதியில், தொரணவில சந்தியில், முச்சக்கர வண்டியில் சென்ற ஒருவர், குறித்த நபருக்கு பொதி ஒன்றை வழங்கியதை, உந்துருளியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவதானித்துள்ளார். இதன்போது, முச்சக்கர வண்டிச் சாரதி கைது செய்யப்பட்டதுடன், போதைப்பொருளை உட்கொண்டவர் தப்பிச் சென்றுள்ளார். எனினும் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின்போது, உயிரிழந்தவரின் வயிற்றிலிருந்து 13 போதைப்பொருள் உருண்டைகள் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (ப)



# வீடுகளுக்குள் மக்களை முடக்கி முல்லையில் காணி அபகரிப்பு

## தமிழ் பிரதிநிதிகளை செயலற்றவர்கள்போல் காட்டும் முயற்சி என்கிறார் சிவமோகன்

முல்லைத்தீவு, ஜூன் 11

கொரோனாச் சட்டத்தினால் மக்களை முடக்கி வைத்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணி அபகரிப்பு முனைப்பில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என்றும், இத்தகைய செயற்பாடு, தற்போதைய தேர்தல் காலத்தில் தமிழ் பிரதிநிதிகளைச் செயலற்றவர்கள் போன்று காட்டவும், குறிப் பிட்ட ஒரு கட்சியினை வெற்றியீட்ட வைப்பதற்குமான முயற்சி எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



முல்லைத்தீவு மாவட்டத்தில், மக்கள் ஆண்டு அனுபவித்த நிலங்களையும், ஏற்கனவே மக்களுக்காக, வனவளப் பிரிவினரிடம் கோரி விடுவித்துத் தருமாறு கேட்கப்பட்ட காணிகளையும் கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் முனைப்புக் காட்டுகின்றனர் எனத் தெரியவருகின்றது. பிரதேச செயலங்கள், மற்றும் மாவட்ட செயலகம் ஊடாகத்தான் இராணுவத்தினர் இத்தகைய செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர் என நான் நினைக்கின்றேன். இது தேர்தல் காலம், தேர்தல் காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பதவி இழந்த நிலையில், தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் குறுக்குத்தனமாக, குள்ளத்தனமாக எமது நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றமையை அனுமதிக்க முடியாது. அதற்கு அரச திணைக்களங்களும் துணைபோகின்றன. தற்போது திணைக்கள அதிகாரிகள் காணிகளை அடையாளப்படுத்துமாறு அறிவுறுத்தி வருகின்றனர். அதற்கமைய அலுவலக ஊழியர்கள் கிராமங்கள்தோறும் சென்று காணிகளை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், வெலி ஓயா பிரதேசசெயலகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இத்தகைய காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டிவருகின்றனர்.

கொரோனாச் சட்டத்தைப் பயன்படுத்தி, எம்மை ஒன்றுகூடவிடாது தடுத்துக்கொண்டு, இவர்கள் காணிகளை அபகரிப்பதற்காக நரித்தனமான வேலையை முன்னெடுத்து வருகின்றனர். எனவே முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களத்திடமும், மாவட்டச் செயலரிடமும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளேன் - என்றார். (ப-246)

# கொவிட் –19 கட்டுப்படுத்தலுடன் புதிய படைப்புகளும் உருவாகின

## மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

கொவிட் 19 நிலைமையைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டின் ஊடாக நூற்றுக்கணக்கான புதிய படைப்புகளின் உருவாக்கத்தைக் காண முடிந்ததாக சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார சேவைகள் அதிகாரமளித்தல் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற புதிய கண்டுபிடிப்பாளர்களை அடையாளம்கண்டு அவர்களை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் சுகாதார சேவைக்கு அதிகமான உள்ளூர் தயாரிப்புகளை வழங்குவதற்கும் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் அவற்றுக்கு தொழில்நுட்ப வசதிகள், மற்றும் நிதியுதவியையும் வழங்க உள்ளதாக சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார அதிகாரமளித்தல் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க உபகரண வசதி, தொழில்நுட்ப வசதி மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளையும் இங்கு குறிப்பிடப்படாத வேறு எந்த யோசனைகளையும் இதற்காக முன்வைக்கப்படும் பட்சத்தில் அது குறித்து பரிசீலிக்கப்படும். இதுபோன்ற யோசனைகள் ஆரம்ப சுகாதார சேவைகள் அதிகாரமளித்தல் திட்டத்துக்கு முன்வைக்கப்பட்டால், அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான நிதியை வழங்கவும் தயாராக இருக்கின்றோம்.

மேலும் சுகாதாரத் துறையில் புதுமையான படைப்புகளை உருவாக்க விரும்புவோர் சுகாதார அமைச்சின் இணையத்தளமான w.health.gov.lk என்பதை பார்வையிடலாம் அல்லது அந்த செயற்றிட்டத்தின் இணைய முகவரியான www.pssp.health.gov.lk ஐயும் பார்வையிடலாம். அல்லது விவரங்கள் மற்றும் பயன்பாடுகளுக்கு psspmoh.lk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பவும். புதிய படைப்பாளிகளுக்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# வீட்டிலிருந்து பணி புரிவோருக்கு புதிய 'டேட்டா பக்கேஜ்' வசதிகள்

கொழும்பு,ஜூன் 11

கொவிட் 19 காரணமாக வீட்டிலிருந்து தொழில்புரிவோர் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு உதவும் வகையில் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு புதிய டேட்டா பக்கேஜ் வசதிகளை அறிமுகம் செய்துள்ளது.

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த இரண்டரை மாதகாலமாக நாட்டின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் முடக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் தத்தமது வீடுகளில் இருந்தவாறே பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தற்போது நாட்டின் செயற்பாடுகள் ஒவ்வொரு கட்டமாக மீண்டும் வழமைக்குத் திரும்பிவந்தாலும், இன்னமும் வீட்டிலிருந்தவாறு வேலைசெய்தல் மற்றும் கல்வி செயற்பாடு என்பவற்றுக்கான தேவை காணப்படுகின்றது.

எனவே இதற்குப் பயன்படுத்தப்படும் டேட்டா பக்கேஜ்களுக்கான செலவுகளைக் குறைக்கும் வகையில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழான சேவை வழங்குநர்கள் ஊடாக புதிய டேட்டா பக்கேஜ் வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இதனூடாக வீட்டிலிருந்தவாறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் கல்விச்செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பயனடைய முடியுமென இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது. புதிய டேட்டா பக்கேஜ் சேவை வழங்கல் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவின் http://www.trc.gov.lk/ <http://www.trc.gov.lk/> என்ற இணையத்தள முகவரியில் பிரவேசிப்பதனூடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிறைகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவு

கொழும்பு, ஜூன் 11

சிறைச்சாலைகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சிறைச்சாலைகளுக்குள் தடைசெய்யப்பட்ட பொருள்கள் மற்றும் போதைப் பொருள்களை எடுத்துவரும் செயற்பாட்டைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை களுத்துறை சிறைச்சாலையில் நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 5 சிம் அட்டைகள், 7 அலைபேசிகள், 5 பற்றரிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சுகாதார விதிமுறைக்கு அமையவே பிரசாரக் கூட்டங்களை நடத்தலாம்

## மீறுவோர் மீது சட்டம் பாயும் என எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 11

சுகாதாரப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவே பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை முன்னெடுக்க அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிதிகளை மீறிச் செயற்படுபவர்கள் தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன், அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் தயாராக இருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பில் சுகாதாரப் பிரிவு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த விதிமுறைகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்கும் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. அதற்கமைய அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கமைய தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்கள் இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன் சுகாதாரப் பிரிவினரின் விதிமுறைகளை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கோட்டை ரயில் நிலையத்தில் இலவச பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை இலவசமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு, மாநகர சபை மருத்துவர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவொன்றினால் இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இங்கு மருத்துவர் குழுவினால் நாளாந்தம் 50 பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கோட்டை ரயில் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

ரயில் ஊழியர்கள் மற்றும் ரயில் பயணிகளுக்கு இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் கோட்டை ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார். (ப)

# அறிகுறியற்ற கொரோனா தொற்றால் ஆபத்தில்லை

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

அறிகுறிகளற்ற கொரோனா தொற்றால் எவ்வித ஆபத்துகளும் இல்லையென்றும் இது மற்றவர்களுக்கு பரவுவது என்பது அரிதானது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் மருத்துவர் டெட்ரோஸ் அதானோம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 10 நாட்களில், 9 நாள்கள் தினமும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. இந்த 9 நாட்களில் ஒரு நாளில் மாத்திரம் ஒரு லட்சத்து 36 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று பாதிப்பு தெரிய வந்துள்ளது. குறித்த பாதிப்பில் 75 சதவீதம், அமெரிக்கா மற்றும் ஆசியாவின் 10 நாடுகளில் பரவியுள்ளது. எவ்வித அறிகுறிகளுமற்ற கொரோனாத் தொற்றால் ஆபத்து இல்லை. காரணம், இது மற்றவர்களுக்குப் பரவுவது என்பது அரிது என்ற தகவலை உலக சுகாதார நிறுவனத்தின் தொற்றுநோய் மருத்துவ நிபுணர் மரியாவான்கெர்கோவ் தெரிவித்துள்ளார்.

தங்களிடம் உள்ள தரவுகள், ஓர் அறிகுறியற்ற கொரோனா தொற்றுள்ள நபர், மற்றொருவருக்கு கொரோனா தொற்றை பரப்புகிறார் என்பது மிகவும் அரிதாகவே தோன்றுகிறது. இது மிகவும் அரிது. இவ்வாறு அறிகுறிகள் இல்லாமல் கொரோனா பாதிப்புக்கு ஆளாகிற நபர்கள், தொடர்பு தடம் அறிதல் மூலம் அடையாளம் காணப்படுகிறார்கள். இவர்களிடம் இருந்து மற்றவர்களுக்கு கொரோனாத் தொற்று பரவுவதில்லை என்பது தொடர்பு தடம் அறிந்த நாடுகளின் தரவுகளில் இருந்து தெரிய வந்திருக்கிறது. இந்த தரவுகளை உறுதிப்படுத்துவதற்கு உலக சுகாதார நிறுவனம் மறுஆய்வு செய்கிறது- என்றார். (ப)

# பெண் பொலிஸ் அதிகாரியின் துணிச்சலுக்குப் பாராட்டுக்கள்

கொழும்பு, ஜூன் 11



கொழும்பு வைத்தியசாலை ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவுப் பணத்தைக் கொள்ளையிட்ட நபரை மடக்கிப் பிடித்த பெண் பொலிஸ் அதிகாரியின் துணிச்சலுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

மாத்தறை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொறுப்பதிகாரியான OIC, வருணி கேசலா போகாவட்டா தமது தனிப்பட்ட தேவை நிமித்தம் நேற்று முன்தினம் மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி தனது குழந்தையுடன் சென்றார். இதன் போது வழியில் கைத்துப்பாக்கியுடன் வீதியின் நடுவே ஓடிவந்த ஒரு சந்தேகநபரை கண்டுபின் தொடர்ந்தே சந்தேகநபரை மடக்கிப் பிடித்தார். அவரிடமிருந்து வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் 79 இலட்சம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டது,

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிறப்பு வைத்தியராக கடமை புரிந்த ஒருவரே இவ்வாறு பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. பெண் பொலிஸ் அதிகாரியின் இந்த துணிச்சலை அனைவரும் பாராட்டியுள்ளனர். (ப)

# கஞ்சாவுடன் பெண் கைது

மட்டக்களப்பு, ஜூன் 11

கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 59 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடிப் பகுதியில் வைத்து இன்று கைதுசெய்யப்பட்டார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இவர் கைதுசெய்யப்பட்டார். பிறைந்துறைச்சேனையை பூர்வீகமாகக்கொண்ட இவர் புணானை ஜெயந்தியாயப் பகுதியில் வசித்து வருபவர் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணிடமிருந்து 42 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி2)



# நாட்டில் பரவலாக மழை பெய்யக் கூடும்

கொழும்பு ஜூன் 11

மேல், வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும் குறிப்பாக மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி2)

# மு.காவுடன் கூட்டணி வைத்ததாலேயே எமக்கு பௌத்த வாக்கு வங்கி சரிந்தது

## தயா கமகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக்கொண்டதாலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்கான பௌத்த வாக்கு வங்கி சரிந்தது என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான தயா கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இனவாத அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களிடம் இனவாதத்தைப் பரப்பியே அக்கட்சியினர் வாக்குகளைப் பெற்றுவருகின்றனர். அவர்களுடன் ஒரே கூட்டணியில் இருந்தபோது இந்த விடயத்தை வெளிப்படையாகக் குறிப்பிடமுடியாமல் இருந்தது. முஸ்லிம் மக்களின் உரிமைக்காக என்ற போர்வையில் உணர்வுகளைத் தூண்டியே அரசியல் நடத்துகின்றனர். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியானது சிங்கள மக்களுக்கு எதிரான கட்சி என்ற எண்ணம் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் உருவானது. அதனால் எம்மிலிருந்து விலகும்நிலை உருவானது. தமக்குச் சாதகமான மாவட்டங்களில் தனித்தும், வாக்குகளைப் பெறமுடியாத மாவட்டத்தில் கூட்டணி அமைத்துமே முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு வருகின்றது.



ஆனால், தமது கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என இன வாத ரீதியில் பிரசாரம் முன்னெடுப்பார்கள். இந்நிலைமை மாற வேண்டும் - என்றார். (ப-44)

# கிழக்கு தொல்பொருள் இடங்களை காக்கும் பொறுப்பு செயலணியிடம்

திருகோணமலை ஜூன் 11



கிழக்கு மாகாணத்திலுள்ள சகல தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் இன, மத பேதமின்றி பாதுகாப்பதற்கான பொறுப்பை, ஜனாதிபதி செயலணியிடம் ஒப்படைத்துள்ளதாக, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண தொல்பொருள் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி, பாதுகாப்பு அமைச்சில், நேற்று கூடிய போதே, குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, பாதுகாப்புச் செயலாளர் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ரி2)

# ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் தாக்குதல்

## வன்மையாகக் கண்டிக்கிறாராம் நாமல்

கொழும்பு, ஜூன் 11



அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகிலும் லிப்டன் சுற்று வட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்திய வர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கறுப்பின மனிதர் ஜோர்ஜ் புளொய்ட் கொல்லப்பட்டமைக்கு எதிராக கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர். இந்நிலையில், இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ அமெரிக்க தூதரகத்திற்கு அருகிலும் லிப்டன் சுற்றுவட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பொலிஸ் திணைக்களத்தில் ஆற்றப்பட்ட சேவைகள் இவ்வாறு ஒரு சில பொலிஸாரின் செயற்பாடுகளால் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ப)

# இந்தியர் ஒருவர் திடீர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு, புறக்கோட்டைப் பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில் இந்திய நபர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பிலான உடற்கூற்றுப் பரிசோதனைகள், மற்றும் கொவிட் 19 தொற்றை இனங்காணும் பி.சி.ஆர். பரிசோதனை இன்று மேற்கொள்ளப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (ஐ-ரி2)

# திருட்டுக் குற்றச்சாட்டு; சந்தேகத்தில் ஐவர் கைது

திருகோணமலை, ஜூன் 11

திருகோணமலை, தலைமையகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலையூற்றுப் பிரதேசத்தில் இரு இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து திருட்டுப் போன பொருள்கள் மீட்கப்பட்டதுடன் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பாலையூற்று பிரதேசத்தில் கடந்த ஒன்றரை மாத காலமாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. குறித்த திருட்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளை அடுத்தே அந்த ஐவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தொலைக்காட்சிப் பெட்டி, குளியலறைப் பொருள்கள், தையல் இயந்திரம், மின்விசிறி போன்றன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் பாலையூற்று பிரதேசத்தின் ரயில் நிலைய வீதி, பூம்புகார் வீதி, முகம்மதியாநகர், முருகன் கோயிலடி போன்ற இடங்களைச் சேர்ந்த 21, 22, வயதுகளையுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-ரி2)

# ரயில் மோதி ஒருவர் சாவு

கொழும்பு, ஜூன் 11

வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். தெஹிவளையிலிருந்து கொழும்பு, கோட்டை நோக்கிப் புறப்பட்ட ரயில், குறித்த நபர் மீது மோதியுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹிவளை, களுபோவில பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விரிவான விசாரணகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப)

# பல்கலைக்குத் தெரிவான இரட்டையர்களில் ஒருவர் உயிரிழப்பு

கேகாலை, ஜூன் 11

கேகாலை மாவட்டத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தர பரீட்டையில் விஞ்ஞான பிரிவில் 4ஆம், 5ஆம் இடங்களைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுக்கொண்ட இரட்டைச் சகோதரர்களில் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார். ருசிருதேஷான் மனதுங்க மற்றும் இசுரு ஹெஷான் மனதுங்க ஆகிய இருவரில் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இசுரு ஹேஷான் என்பவருக்கு சுகவீனம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சமீபத்தில் கேகாலை பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் நேற்று பிற்பகல் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-ரி2)

# பொலிஸார் தாக்குதல்....

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கண்டனம் தெரிவித்தார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான பொலிஸாரின் தாக்குதலை அமைச்சரவையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்யும் நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த முயன்றவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்தே அவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னிலை சோசலிசக் கட்சியினருடன் மோதலில் ஈடுபட்ட 30 பொலிஸாரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்-என்றார். (எ-22)

# வாழைச்சேனையை அடைந்தது பாத யாத்திரைக் குழு

திருகோணமலை, ஜூன் 11



திருகோணமலையிலிருந்து ஆரம்பித்த கதிர்காமத்திற்கான பாதயாத்திரைக் குழுவினர் 11ஆம் நாளான இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு வாழைச் சேனையை வந்தடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 21ஆம் திகதி திருகோணமலையின் லங்கா பட்டினம் முருகன் கோவிலிலிருந்து யாத்திரையை ஆரம்பித்த 35 பேர் கொண்ட குழுவினர் 11 நாள்களின் பின்னர் நேற்று வாழைச்சேனை கயிலாயப் பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்துள்ளனர். (ப-ரி2)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 11.06.2020 இல் வெளியிடப்பெற்றது.